மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பயிர் வகைகளை உற்பத்தி செய்வதில் வரவரக் கொஞ்சம் குறைவு ஏற்படுகிறது. காவேரி நீரை நாம் பிப்ரவரி மாதத்திலே அடைத்துவிடுகிறோம். தஞ்சை, திருச்சி போன்ற பகுதிகள் ஏறத்தாழ 4 மாதங்கள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் புதிய திட்டம் தீட்டி, இந்தப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தஞ்சை, திருச்சி போன்ற பகுதி களில் தீவிர திட்டங்கள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த அசசிட்ட அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது ஊட்டப் பயிராகவும், கலவைப் பயிராகவும் அல்ல. அறுவடை ஆனபிறகு, ஜூன், ஜூலையிலே 3-வது பயிராகத்தான் நாம் ஊக்குவித்துக்கொண்டு வருகிறோம்.

திருச்சிராப்பள்ளியில் கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம்.

*386 வினா—திரு. பெ. சௌந்தர பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே தற்போது துவங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கோழிப் பண்ணைக்கென்று ஒரு தனி கார்ப்பரேஷன் நிறுவப்பட்டுள்ளதா? ஆமென்றால், நிறுவியதன் நோக்கம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கோழிப் பண்ணைக்கு என்று ஒரு கழகம், ஒரு கார்ப்பரேஷன் நிறுவப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படை நோக்கம் என்னவென்றால், அந்தக் கார்ப்பரேஷனை நாம் அமைத்திருப்பதால், பாங்கிலிருந்தும் பினான்ஸ் இன்ஸ்டிட்டியூஷன் களிடம் இருந்தும் கடன் வாங்க முடியும். அரசு, பாங்கிலிருந்து கடன் வாங்க முடியாது. அதன் மூலமாக, இதை அதிகமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பது மட்டுமல்லாமல், கார்ப்பரேஷன் என்று சொல்லும் போது அது லாபத்தில் இயங்கவேண்டுமென்ற அந்த முறையையும் கடைப்பிடிக்கவேண்டும்.

@ 236–237-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 238–241-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 மார்ச் 12]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கார்ப்பரேஷன் எப்போது துவங்கப்பட்டது? நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகிறது? தற்போது லாபத்தில் இயங்குகிறதா? எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது? என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அது தொடங்கிய தேதி விவரம் கைவசம் இல்லை. ஆனால், கணக்கு அடிக்கடி வந்துக்கொண்டிருக்கிறது. முதலாண்டு லாப நட்டக் கணக்கு இன்னும் வந்து சேரவில்லை.

மேட்டுப்பாளையம் நகரமன்றக் கட்டிடம்.

*387 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகர மன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றம், ரூ. 4,43,000 மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொள்ளத் தீர்மானித்து, அக்கட்டிட வேலையைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்க அரசின் அனுமதியை வேண்டியது.

நகாராட்சி மன்றங்களின் கட்டிட வேலைகளை எடுத்துச் செய்ய, பொதுப் பணித்துறை உள்ளபோது அவ்வேலைகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் எடுத்துச் செய்ய அனுமதிப்பது சரியாகாது என்று அரசு கருதியதால் மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகவே, கட்டிடம் அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே சொந்தக் கட்டிடம் இல்லாத நகராட்சி மேட்டுப்பாளையம் நகராட்சி ஒன்றுதான். அதற்காக கால்கோள் விழா நடைபெற்று ஆண்டு பலவாகிறது. இந்த ஆண்டிலாவது அதற்குப் புதிய கட்டிடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்ட அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் கட்டுவது யார் என்பதிலேதான் விவகாரம் இருக்கிறது. மீண்டும் அதைப் பரிசீலனை செய்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உடனடியாக அனுப்பப்பட்டால் இந்த ஆண்டே அந்த வேலையை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.